# எப்படியெனினும்...



அழ. பகீரதன்

JPL
C13209

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# எப்படியெனிலும்...

பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகர
யாழ்ப்பாணம்

அழ. பகீரதன்

KOHA
JPL

13209 CC

தேசிய கலை இலக்கிய பேரவை

276836

276836 CC

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2
94.8111

தேசிய கலை இலக்கியப் பேரவை வெளியீடு- 115

| | | |
|---|---|---|
| நூல் பெயர் | : | எப்படியெனிலும்... தேர்ந்த கவிதைகள் |
| ஆசிரியர் | : | அழ. பகீரதன் |
| வெளியீடு | : | தேசிய கலை இலக்கியப் பேரவை 121 , ஹம்டன் லேன், வெள்ளவத்தை, கொழும்பு 6 |
| பதிப்பு | : | யூலை, 2013 |
| பக்கங்கள் | : | 64 |
| அச்சு பதிவு | : | ஜே எஸ் பிறிண்டேஸ் சில்லாலை வீதி பண்டத்தரிப்பு |
| விலை | : | ரூபா 150=/ |
| ISBN | : | 978-955-8637-33-3 |

| | | |
|---|---|---|
| Book Title | : | Eppadiyeniyum... (Selected Poems) |
| Author | : | Aza. Paheerathan |
| Pubilsher | : | Dhesiya Kalai Ilakkiya Peravai, 121, Hamden Lane, Wellavette, Colombo 6 |
| Publication | : | July, 2013 |
| Pages | : | 64 |
| Printing | : | J S Printers Sillalai Road, Pandatharippu. |
| Price | : | 150/= |
| ISBN | : | 978-955-8637-33-3 |

10 JUN 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



10 JUN 2020
யாழ்ப்பாணம்

# சமர்ப்பணம்

சிறுவயதில் காலையடி மறுமலர்ச்சி மன்றத்துடன்
இணைந்து
பொருளாளராய் செயலாற்றி
பணிப்புலம் அம்பாள் சனசமூக நிலைய
நிர்வாகியாகி
இளம் வயதில்
என்னை ஆற்றுப்படுத்தி
சமூக நோக்கை
எனக்குள் விதைத்து
கனடாவில் வாழ்ந்து
பண் கலை பண்பாட்டுக் கழகத்தின்
நிர்வாகியாய் செயற்பட்டு
மறைந்த
எனது நண்பர்
அமரர்
**நவரத்தினம் இளங்கண்ணன்**
நினைவிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதிப்புரை

1997 ஆம் ஆண்டில் "அப்படியே இரு" எனும் கவிதைத் தொகுதியையும் சென்ற ஆண்டில் "இப்படியும்..." எனும் கவிதைத் தொகுதியையும் தேசிய கலை இலக்கியப் பேரவை மூலம் தந்த கவிஞர் அழ. பகீரதனின் மூன்றாவது தொகுதியாகிய "எப்படியெனிலும்.." எனும் கவிதைத்தொகுதியைத் தேசிய கலை இலக்கியப் பேரவையின் 115 வது வெளியீடாக பெருமையுடன் வெளிக் கொணரும் இத்தருணத்தில் அழ பகீரதன் கவிதைகளில் இழையோடும் சமூக நோக்கு பற்றி பேசுவதும் விவாதிப்பதும் அவசியமானது.

கடந்துவந்த பாதையிலுள்ள இடர்ப்பாடுகளும், இழந்துபோன மனித நேய நோக்குகளை மீட்பதும் சமத்துவத்துக்கான வெகுஜன மார்க்கத்தை கண்டடைதலின் அவசியப்பாடும் அவரது கவிதைகளில் உள்ளார்த்தமாக இழையோடுவதையும் காணலாம்.

தேசிய கலை இலக்கியப்பேரவையின் செயலாற்றல் மிக்க உறுப்பினரான அழ.பகீரதன் படைப்புக்கள் பரந்த தளத்தில் வாசிப்புக்குரியன. மக்கள் இலக்கியம் படைக்கும் இக் கவிஞரின் "இப்படியும்" கவிதைத் தொகுப்பின் அறிமுக நிகழ்வு புத்தூர் கலைமதி மக்கள் மண்டபத்திலும் காலையடி மறுமலர்ச்சி மன்றத்திலும் சங்கானைப் பிரதேசத்திலும் கொழும்பில் தேசிய கலை இலக்கியப் பேரவைத் தலைமையகத்திலும் இடம்பெற்று மக்கள் மத்தியில் சென்று சேர்ந்தது. இந் நூலின் வெளியீடு மக்களின் அரங்க வாசிப்பாக ஊர்கள் பலவும் இடம்பெற்று அதன் பயன்பாடு கனதியாக அமையும் என எதிர்பார்க்கின்றோம்.

முன்னுரையைக் குறுகிய காலத்துள் வழங்கிய கவிஞர் எஸ்,கருணாகரன், "இப்படியும்..." நூலை குறுகிய காலத்துள் அச்சுப் பதித்து வழங்கியதுபோல இந்நூலையும் குறுகிய காலத்துள் செய்துதவிய பண்டத்தரிப்பு ஜே. எஸ். பிறிண்டேஸுக்கும் எமது நன்றிகள்.

இந்நூல் பற்றி ஆக்கமான விமர்சனங்களை வரவேற்கின்றோம்.

தேசிய கலை இலக்கியப் பேரவை
121,ஹம்டன் லேன், வெள்ளவத்தை
கொழும்பு-6



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமநிலையை விரும்பும் கவி

'நீ எதுவாக இருக்கிறாயோ அதுவாகவே உன் அடையாளமும் இருக்கும்'.

வாழ்க்கையை ஒருவர் நோக்கும் விதமே அவர் வாழும் விதத்தைத் தீர்மானிக்கிறது.

இது எப்படி அமைகிறது?

ஒரு காலகட்டத்தில் ஒரு சமூகச் சூழலில் பலர் வாழ்ந்தாலும் எல்லோருடைய வாழ்க்கையும் வாழ்க்கை முறையும் ஒன்றாக அமைவதில்லை. எல்லோருடைய நம்பிக்கைகளும் எண்ணங்களும் கூட ஒரேவிதமாக இருப்பதில்லை. ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் நம்பிக்கைகளிலும் செயற்பாடுகளிலும் அடையாளங்களிலும் நிற வேறுபாடுகள், குணவேறுபாடுகள் ஏராளமுண்டு. எனில் ஏராளம் ஏராளம் நிறப்பிரிகையுயோரே மனிதர். அவரவர் கொள்கின்ற நம்பிக்கைகள், நம்பிக்கையின்மைகள், கேள்விகள், கண்டடைகின்ற பதில்கள், சிந்த னைகள், கிடைக்கின்ற வளங்களையும் வசதிகளையும் வாய்ப்பு களையும் பயன்படுத்திக்கொள்ளும் முறைகள், அனுபவங்கள் போன்ற பல விசயங்கள் ஒவ்வொருவருடைய வாழ்க்கையையும் வாழும் முறையையும் தீர்மானிக்கின்றன. இதில் பிரதான காரணமாக அமைவது மன உருவாக்கமாகும். இந்த மன உருவாக்கமானது, சூழலினாலும் கருத்துக்களினாலும் கட்டமைக்கப்படுகிறது. ஒருவரி டமுள்ள கருத்துக்களே அவரையும் அவருடைய வாழ்க்கையையும் ஒழுங்கமைக்கும் பிரதான காரணிகளாக அமைகின்றன.

சமூகத்தில் பல விதமான கருத்துக்கள் உள்ளன. இதனால், பலவிதமான கருத்துடையோரும் உள்ளனர். மனிதர்களின் சிந்தனை ஆற்றல், வெவ்வேறு கள, காலச்சூழலில் ஒவ்வொருவரையும் வெவ்வேறாகச் சிந்திக்கத் தூண்டுகின்றன. பல விதமான எண்ண வோட்டங்கள், வெவ்வேறான அனுபவங்களின் பெறுகை, அவற்றி னடியாக உருவாகின்ற அறிகை போன்றன இந்தக் கருத்துக்களை உருவாக்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆளுமையுடையவர்கள், தாம் காண்கின்ற அறிவின் வழியாக, சிந்தனையின் படிகளில் ஏறிச் செல்ல முற்படுகிறார்கள். ஆளுமை குன்றியவர்கள் சமூகத்தில் நிலவுகின்ற வழமைகளின் வழியே பயணிக்கின்றனர். இதனால், ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் வாழும் முறையும் வேறுபடுகிறது. கூடவே அவரவர் அடையாளங்களும் வேறுபடுகின்றன. முரணும் ஒழுங்கமைவும் கூட இந்த இரண்டுக்கு மிடையிலானவையே. இரண்டையும் சார்ந்தவையே.

அழ. பகீரதனின் கவிதைகளைப் படிக்கும்போது அவர் ஒரு விலகியாகத் தெரிகிறார். சமூகத்திலுள்ள குறைபாடுடைய நம்பிக்கைகளின் மீது தன்னுடைய நம்பிக்கையின்மைகளையும் அதிருப்தியையும் கண்டனத்தையும் துணிச்சலாக வெளிப்படுத்துகிறார். சில இடங்களில் இந்தக் குறைபாடுடைய நம்பிக்கையைக் கேலிப்படுத்துகிறார். இதன்மூலம் தன்னுடைய சிந்தனைகளையும் வழிமுறைகளையும் அதிகம் நம்புகின்ற ஒருவராக இருக்கிறார். பாழடைந்திருக்கும் சமூகத்தைப் புதுப்பிப்பதைப் பற்றிச் சிந்திக்கிறார். சமூகத்திலுள்ள குறைபாடுகளின் மீது கண்டனங்களையும் விமர் சனங்களையும் முன்வைக்கின்ற ஒருவர் புதிய வழியை அல்லது மாறுதலான வழிமுறையைப் பற்றிச் சிந்திப்பவராகவே இருக்க முடியும். ஆனால், இங்கே நாம் ஒரு முக்கியமான விசயத்தைக் கவனிக்க வேண்டும். சமூகத்தில் ஒரு தரப்பினரால் கொண்டாடப்படுகிற விசயங்களும் நம்பிக்கைகளும் இன்னொரு தரப்பினருக்குக் குறைபாடுகளாகவும் கேலியாகவும் படும். இவர்களுக்கு முக்கிய மானதாகவும் சிறப்பானதாகவும் படுகின்ற விசயங்கள் மற்றவர்களுக்கு அநாவசியமானவையாகத் தெரியும். இது ஒரு முரண்தான். ஆனால், இதுதான் இயல்பும் வழமையும். இதேவேளை வழமைகளுக்குள் மட்டுப்பட்டிருக்கும் ஒரு சமூகத்தினால் முன்னகர முடியாது.

வழமைகளிலிருந்து மீறல்கள் நிகழும்போதே புதிய காலடிகள் வைக்கப்படும். புதிய பயணம் நிகழும். சுவடுகள் தெரியும். ஆனால், வழமைகள் ஒரு எல்லைவரையில் முக்கியமானவை அடிப்படை யானவை என்பதையும் நாம் புறக்கணிக்க முடியாது. வழமைகள் முன்னர் ஒரு சூழலில் ஏற்பட்ட தேவைகளின் நிமித்தமாக உருவாகியவையும் உருவாக்கப்பட்டவையுமாகும். அதற்காக அவை என்றென்றைக்கும் தொடரப்பட வேண்டிய அவசியத்தி லிருப்பதில்லை. அப்படிக் கடைப்பிடிக்கவும் முடியாதவை. ஆனால், சமூக அமைப்பில் உள்ள சில சக்திகள், தங்களுக்கு இசைவான விசயங்களைத் தமது நலனின் அடிப்படையில் தேர்ந்து, அவற்றைப் பேண முற்படுகின்றன. இவை மாறா வழமைகளாக, மீறமுடியாத நியதிகளாக்கப்படுகின்றன. என்றாலும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை மீற வேண்டியது அவசியம் என சமகால நிலைமை வற்புறுத்தும். எதிர்காலச் சவால்கள் நிர்ப்பந்திக்கும். இங்கேதான் முரணும் அந்த முரணை நீக்குவதற்கான போராட்டமும் உருவாகின்றன. இந்த போராட்ட நிலையில் பல சடங்குகளும் நம்பிக்கைகளும் வழக்கிழந்து போவதை நாம் அவதானிக்கலாம். ஆதிச் சமூகத்திலிருந்த பல விசயங்களை இன்றைய மனிதர்கள் அப்படியே பின்பற்றுவதில்லை. அப்படித்தான் ஒவ்வொரு காலகட்டத்தின் விசயங்களையும் அடுத்த காலகட்டம் நிராகரிக்கிறது, அல்லது கழித்து விடுகிறது. பலதையும் நீக்கியவாறே காலம் நகர்ந்து கொண்டிருக்கிறது. மனிதர்கள் முன்னகர்வதற்காகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். மனிதர்களின் பரிணாம வளர்ச்சியின் விதி அப்படித்தான். பழையனவற்றைக் கழித்தும் புதியனவற்றைச் சேர்த்தும் இயங்கும்.

அழ. பகீரதன் பரிணாம விதியின் வழிச் செல்லும் பயணி. சமூக அசைவியக்கத்தில் கரிசனையுடைய கவி. என்பதால், இலக்கியத்தை சமூக அசைவுக்காக பயன்படுத்த விளைகிறார். ஈழ இலக்கியத்தின் பெருந்தொகை இத்தகைய பண்பையே உடையது. சமூகக் குறைபாடுகளையும் அநீதியையும் மூடத்தனங்களையும் கேலிப் படுத்துவது, அம்பலப்படுத்துவது, விமர்சிப்பது, இந்த நிலையிலிருந்து புதிய வெளிகளை நோக்கிப் பயணிக்க உந்துவது. த்திரன், பசுபதி, புதுவை இரத்தினதுரை, சில்லையூர் செல்வராசன், வி. கந்தவனம், நீலாவணன், புரட்சிக்கமால், இ.முருகையன், சி.சிவசேகரம் என ஒரு பெருந்திரள் கவிகள் இந்த வகையில் இயங்கி வந்துள்ளனர். பகீரதன் இவர்களின் தொடர்ச்சியாக உள்ளார். கவிதையைச் சனங்களின் ஈடேற்றத்துக்காக எழுதுபவராக.

பகீரதனின் இந்த வழிமுறையானது அவருக்கு நெருக்கமாக இருக்கும் சோ. தேவராஜா மூலமாக ஏற்பட்டிருக்கலாம் என எண்ணுகிறேன். தேசிய கலை இலக்கியப் பேரவையின் முதன்மைச் செயற்பாட்டாளர்களில் ஒருவராக இருக்கும் சோ. தேவராஜா, கலை, இலக்கியச் செயற்பாடுகளில் பல தலைமுறையாளர்களுடன் இணைந்து பயணிப்பவர். பண்டத்தரிப்பைச் சேர்ந்த தேவராஜாவின் கலை, இலக்கிய நோக்கு அதேயிடத்தைச் சேர்ந்த பகீரதனிடத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது. பகீரதனின் இலக்கிய நோக்கும் அடையாளமும் ஏறக்குறைய தேசிய கலை இலக்கியப் பேரவையின் சிந்தனைச் சாரத்தையுடையதாகவே உள்ளது. தேசிய கலை இலக்கியப் பேரவையோடும் தாயகம் இதழோடும் பகீரதன் கடந்த இருபத்தைந்து
ஆண்டுகளுக்கும் மேலாக கலந்திருப்பது இதற்கெல்லாம் இன்னும் ஒரு பரிமாணத்தை ஏற்படுத்துவதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980களின் முதற்பகுதியில் பகீரதனுக்கும் எனக்குமிடையில் இலக்கிய ரீதியான நட்பு ஏற்பட்டது. பரஸ்பரம் கடிதங்களை எழுதிக் கொள்வோம். கவிதைகளைப் பரிமாறிக் கொள்வோம். இருவரும் அப்பொழுது உள்ளூர் மட்டத்தில் இதழ்களை வெளியிட்டுக் கொண்டிருந்தோம். அதற்காக இந்தக் கவிதைப் பரிமாற்றங்கள் நிகழ்ந்தன. குண்டு குண்டான எழுத்துகளில் மிக ஆர்வமூட்டும் கவிதைகளை எழுதியிருப்பார். அன்றைய கவிதைகள் அவரைப்போல சாதுவானவையாக இருந்தன. பகீரதன் மிகச் சாதுவானவர். அதிகம் உணர்ச்சி வசப்பட்ட நிலையிலிருந்தாலும் அவரிடமிருந்து சூடான வார்த்தைகளோ, உயர்ந்த குரலோ எழாது. சினக்காத உத்தியோகத்தர் அவர். ஆனால், அவருடைய கவிதைகள் சூடானவை. வலியவை. எழுச்சிகரமானவை. தீர்மானகரமானவை. முருகையனைப் போல தன்னுடைய நிலையை அழுத்தமாகப் பதிவு செய்ய முற்படுபவை.

பகீரதனின் முதற்தொதிகளின் கவிதைகளும் இந்தப் பண்பை உடையவையே. அவருடைய 'அப்படியே இரு!' என்பது உச்சக் கிண்டலும் கேலிப்படுத்தலும் சலிப்பின் வழியாக கோபத்தை அளிப்பதுமாகும். 'அப்படியே இரு' என்பது அசையாத சடமாக, தேங்கிப் போகும் ஒன்றாக, விதிகளுக்குள் உறைந்து போனதாக, உத்தரவுக்குக் கட்டுப்பட்டதாக இரு என இசைவாக்கப்பட்டதைக் கேலிப்படுத் துவதாகும்.

ஆனால், தமிழ்ச் சமூகம் பெரும்பாலும் அப்படித்தான் இருக்கிறது. 'அப்படியே இரு' என விதிக்கப்பட்டதாக, சபிக்கப்பட்டதாக. அதனால் பகீரதன் இதை எதிர்க்கும் விதமாக தன்னுடைய கவிதைத் தொகுதிக்கும் 'அப்படியே இரு' என ஒரு தீவிர கேலிச்சித்திரம் போலத் தலைப்பிட்டிருக்கிறார். பெண்ணைத் தமிழ்ச்சமூகம் அப்படியே அமர்த்தி வைத்திருப்பதை, உறைய வைத்திருப்பதை எதிர்க்கும், கண்டிக்கும், கிண்டலடிக்கும் உச்சநிலை உணர்வு அது. இது ஒரு வகை மாதிரியே. இங்கே பகீரதனின் இந்தப் புதிய தொகுதியில் உள்ள கவிதைகளும் இந்தப் பண்பையே கொண்டிருக்கின்றன. கேலியும் கிண்டலும் சீற்றமும் எதிர்ப்பும் புதிய வழிகாணலுமாக.

……

யாழ்ப்பாணத்துக் கலாசாரம்
யாழ்ப்பாணத்துக் கலாசாரம்
என்று வாய் கிழியக் கத்தல்

எதிர் வீட்டில் கலியாணம்
எடுப்பாய் காட்டி செய்தனர்
என்றால்
தன்வீட்டில் தன்பிள்ளைக்கு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் அதிகம்
எடுப்பாய்க் காட்டச் செய்வதுவோ எங்களது கலாசாரம்?
முத்துப் பந்தலும் மூக்கில் விரலை வைக்கும்
தடபுடல் வீடியோப் பதிவும்
உடன் வருமோ ஆயுளுக்கு
கடன் பட்டு
சோக்கு காட்டிப்போட்டு
வீட்டில் வரிசையாய்
கடன் கொடுத்தவர்
நின்றால்
அக்கம் பக்கம் என்ன நினைக்கும்
பெருமை எதுவென அறியாப்
பெருமையுள் ஆட்பட்டு ஏனிந்த ஆட்டம்
பாட்டம் கூத்து...
சோக்குக் காட்டி
மணம்முடித்து வைத்து
உமக்குள்
மகிழும் பெற்றோரே
கூடி இணைந்த
மணமக்கள் தமக்குள்
கூடி மகிழ்வு கூட்டவென்ற
ஒரு ஐம்பதினாயிரம்
கைக்குள் திணித்து
கனிமூன் சென்றுவருக
என்று வழியனுப்பி வைக்கும்
பழக்கம் உமக்குள் உள்ளதுவோ...
(ஏனுந்த கலாசாரம்...?)

மிகச் சாதாரணமான வார்த்தைகளால், எளிய முறையில் விளக்கிச் செல்லும் மொழிதல் முறையை தன்னுடைய கவிதைக்குப் பயன்படுத்தும் பகீரதன், கவிதை குறித்த எத்தகைய கதையாடல்களைப் பற்றியும் அதிகம் அலட்டிக் கொள்ளாதிருக்கிறார். தன்னால் உணரப்படும் விசயங்களை அவர் இப்படி இலகுத் தன்மையில் வெளிப்படுத்த முற்படுகிறார். சனங்களின் ஈடேற்றத்துக்காக எழுதுவதென்றால், அவர்களுக்கான மொழியில் மொழிய வேணும் என்பதே பகீரதனின் தீர்மானம். தமிழில் இன்று கவிதை வெளிப்பாடுகள் பல வகைப்பட்டுள்ளன. பரிசோதனை முயற்சிகள், பிரதி அளிக்கும் இன்பம் என நவீன கவிதையின் பல்வகை குறித்த விளக்க நிலைகளும் உருவாகியுள்ளன. ஆனால் பகீரதன், சனங்களை இன்பமுற


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பதைப் பற்றி மட்டுமே சிந்திக்கிறார். அதற்காகவே பிரதி எனக் கருதுகிறார். இந்த இன்பமூட்டல் என்பது வறுமையற்ற நிலையினாலும் வாழ்க்கை மேம்பாட்டினாலும் அறிவின் விருத்தியினாலும் ஏற்படுவது என்பதே பகீரதனின் புரிதல். இதனால், அவர் சனங்களின் மொழியில் சனங்களுக்காக மொழிகிறார். அவர்களுடைய மேம்பாட்டுக்காக எழுதுகிறார்.

ஏழைகளின் நிலை நின்று சிந்திக்கும் பகீரதன் ஒரு வங்கியாளராகத் தான் வகிக்கும் பாத்திரத்தையும் வங்கிகளுக்கு வரும் வாடிக்கையாளர்களில் கடனாளிகளாக உள்ள ஏழைகளையும் அவர்களின் நிலையையும் துக்கத்தோடு வெளிப்படுத்துகிறார். சமூக அமைப்பில் உள்ள குறைபாடுகள், ஏற்ற இறக்கங்கள், சமனிலையற்ற தன்மைகள் எல்லாம் ஒருவர் எந்த நிலையிலிருந்தாலும் அவரைப் பாதித்தே தீரும் என்பதற்கு இந்தக் கவிதைகள் சாட்சியம். இங்கே பகீரதன் என்ற கவி அடைகின்ற துக்கம் என்பதை விட ஒரு நியாயமான– தொழில்முறைச் சிந்தனைக்கு அப்பாலான வங்கி உத்தியோகத்தர் அடைகின்ற துக்கம் பெரிது. ஆனால் நடைமுறையில் உத்தியோகத்தர் ஒருவர் இப்படித் துக்கப்பட்டால் அவரால் அந்தப் பணியைச் செய்ய முடியாது. ஏனென்றால், வங்கிகளின் இயல்பும் இருப்பும் வேறான அடிப்படைகளைக் கொண்டது.

சமூகத்தில் சமனிலையற்ற நிலை தொடரும்போது அந்த நிலையை நீக்குவதற்குப் பதிலாக அதைப் பேணும் வகையில் சடங்குகளும் சம்பிரதாயங்களும் நிலைபெற்றிருக்கின்றன. கோவில் களும் மதங்களும் இதில் முக்கிய பாத்திரத்தை வகிக்கின்றன. பாதிக்கப்பட்டவர்களைப் பற்றி, பின்தங்கிய மக்களைப் பற்றிச் சிந்திக்காதவர்கள் மதத்தையும் அதனோடிணைந்த பண்பாட்டு அடுக்குகளையும் தங்களுக்கான கவசங்களாகக் கொள்கின்றனர். இது சமனிலைக்கும் ஜனநாயக விழுமியத்திற்கும் எதிரான ஒரு நிலையாகும். வளர்ச்சியை நோக்கிச் சிந்திக்கும் எவரும் இதை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். ஆனால், வளர்ச்சியைப் பற்றிச் சிந்திக்காத நிலையே நமது சமூகச் சூழலில் பலம்பெற்றுள்ளது.

பெரும் போரொன்றைச் சந்தித்த மக்கள், அதிலிருந்து மீள முடியாமற் தவிக்கின்றனர். இந்த மக்களை மீள் நிலைப்படுத்துவதற்குப் பதிலாக அவர்களைப் பாராமுகமாக விட்டுக்கொண்டு, பதிலாக பெருமெடுப்பில் கோவில் மண்டபங்களைக் கட்டி, சடங்குகளைக் கொண்டாட்டமாக நடத்தும் சமூகத்தைப்பற்றி பகீரதன் ஆட்சேபிக்கிறார். கோவில் காணியில் அந்தப் பகுதி இளைஞர்கள் விளையாடுவதற்கே அனுமதிக்கத் தயாரல்லாத


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்தனை 'வழமையாளர்'களிடத்தில் இருப்பதை பகீரதன் கேலிப்படுத்தி எதிர்க்கிறார். இப்படி ஏராளம் மையங்கள் பகீரதனின் கவிதைகளில் உண்டு.

ஊரிலுள தனவந்தர்
உவந்து தந்த பணத்தில்
அருகமைந்த காணி
ஆலயத்தின் உரித்தாயிற்று
தேரிளுக்க நிலமது
போதாதெனத் தானோ
விசாலமாக நிலத்தை
விரித்து விட்டால்
பார்வைக்கு கோயில்
எடுப்பாய் தெரியுமெனவோ
அடுக்காய் பணம்
கொடுத்தார் தனவந்தர்
அது சரிதான்
அவரது கொடைவள்ளல் தன்மையது
மெச்சத் தக்கது தான்.
நிலத்தைப் பெற்ற
நிர்வாகத்துக்கோ
ஏகப்பட்ட குசி
கூட்டம் போட்டனர்
இந்தப் பெரிய நிலம்
இப்படியே விட்டால்
ஊரிலுள சிறுவர்
கெந்திப் பிடிக்க வருவர்
கிரிக்கற் கூட விளையாடுவர்
நாடி வந்த இளைஞர்
கழகம் அமைத்து பந்து உருட்டுவர்
கண்ட சாதிப் பயலைச் சேர்ப்பினம்
பெண் பிள்ளைகள்
தெருவில் சென்றுவர
கரைச்சல் கொடுப்பினம்
விடக் கூடாது
விரைவாய் மண்டபம் ஒன்று அமைப்பம்
என்ற தீர்மானம் ஏகமனதாய் எடுத்தாச்சு
........
(சங்கதி கேளீரோ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1980 களிலிருந்து இன்று (2013) வரையில் தொடர்ச்சியாக எழுதி வரும் பகீரதனின் கவிதைகள் அவருடைய சமகாலக் கவிஞர்களின் கவிதைகளில் இருந்து வேறுபட்டவை. தமிழ்த்தேசிய அரசியல், அரச பயங்கரவாதத்தை எதிர்த்தல் அல்லது விமர்சித்தல் என்ற தூக்கலான இனவாத அரசியலுக்குள் சிக்கிவிடாத ஒரு சமனிலையை பகீரதன் கடினமாகக் கடைப்பிடித்திருக்கிறார். இதனால், சார்பு - எதிர்ப்பு என்ற கறுப்பு வெள்ளைக் கண்ணாடிகளால் பார்க்கப்படும் நிலையிலிருந்து பகீரதன் தப்பி விட்டார். இது இன்று பகீரதனுக்குக் கிடைத்திருக்கும் ஒரு மிகப்பெரிய கொடையே. தமிழ்ச் சூழலில் தமக்கு உடன் பாடில்லாதோரின் மீது குறிசுடுதலும் அவர்களைப் புறக்கணித்தலும் ஒரு தீராத நோயாகப் பரவியுள்ள நிலையில் பகீரதன் இந்த விசையிலிருந்து நீங்கியிருப்பது பெரிய விசயம்.

ஆனால், அவர் முன்வைத்திருக்கின்ற சமூக விமர்சனங்கள் பகீரதனை இன்னொரு வகையில் புறத்திலேயே வைக்க முற் படுகின்றன. பெருந்திரளுக்கெதிரான மனப்போக்கு இது. ஆகவே, தமிழ்ச் சனங்களின் சாதாரண உளநிலையைத் திருப்திப்படுத்தாத ஒரு படைப்பாளிக்கு நேர்கின்ற நெருக்கடிகள் பகீரதனுக்கும் உண்டு. ஆனால், அவற்றை அவர் தெரிந்து கொண்டு, விரும்பி ஏற்று முன்னகர்கிறார். இது முக்கியமான ஒன்று. பெருந்திரளின் விருப்ப அலைக்கு எதிராக தன்னுடைய படகை ஓட்டிச் செல்லும் துணிச்சலாளியின் செயல் வடிவம்.

முப்பது ஆண்டுகளாக கவிதை இயக்கத்திலும் சமூக ஈடுபாட்டிலும் தன் நிலைப்பாட்டிலும் சளையாமல், பின்வாங்காமல் செயற்பட்டு வரும் ஒரு கவி, இன்னும் தன்னுடைய கவிதைகளை வலிய சொற்களைக் கொண்டே எழுதவேண்டியிருக்கிறது. என்றால், இந்தக் கவி இயங்கும் சமூக நிலை என்ன? மனித வளர்ச்சி என்ன? காலமாற்றங்களின் பொருள் எத்தகையது?

இன்னும் எத்தனை காலத்துக்கு பகீரதன் இப்படியே தன்னுடைய கவிதைகளை எதிர்க்குரலாக எழுதவேணும்? அல்லது பகீரதனைப்போல இன்னும் எத்தனை தலைமுறையினர் தங்கள் உள்ளக் குமுறலோடும் வேதனையோடும் இந்தச் சமூகத்தைப் பார்த்துப் பாட வேணும்? இதற்காகச் சிலுவைகளைச் சுமக்க வேணும்? இந்தக் கேள்விகளை பகீரதனின் கவிதைகள் எழுப்புகின்றன. முன்னர் சொன்ன கவிகளின் தொடர்ச்சியாக பகீரதன் இருப்பதைப்போல, இயங்குவதைப்போல, இனிவரும் கவிகளும் இருக்கவும் இயங்கவும் வேணுமா? எனில் அறிவியலின் வளர்ச்சி, சிந்தனையின் பெறுமானம், மனித உரிமைகள் முதல் நீதி, நியாய அடிப்படைகள் வரையான மனித இயக்கத்தின் பெறுமானம் என்ன? முரணான – எதிர் மனித நடத்தைகளைப் பற்றி மனிதர்கள் சலிப்போடும் கோபத்தோடும் எத்தனை காலம்தான் எழுதிச் சலிப்பது? இந்த உணர்வோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எவ்வளவு காலம் வாழ்ந்து கடப்பது? இந்த முரணியக்கத்துக்கு எதிராகவும் எதிர்நிலைகளுக்கு எதிராகவும் எவ்வளவு காலம்தான் போராடுவது?

நீண்ட நெடிய மனித இயக்கத்தில் பகீரதன் ஒரு போராளியாக சலிப்பின்றி இயங்கிக் கொண்டிருப்பதன் மூலம் இது ஒரு நியதி என்றும் மனித இயக்கமே போராட்டத்தின் அடிப்படையில்தான் அமைந்துள்ளது எனவும் சொல்லாமற் சொல்கிறார். கடல் இருக்கும் வரையில் அலைகள் ஓய்வதில்லை. எனில் அலைகள் உள்ளவரை கடல் ஓய்வதில்லை. மனித வாழ்க்கையும் அப்படித்தான். ஓய்வின்றிய போராட்டங்களின் வழியாக ஊர்ந்து செல்லும் ஒரு நத்தையே.

எஸ். கருணாகரன்
கிளிநொச்சி
2013.07.05

276836

13209CC

KOHA
JPL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கதி கேளீரோ?

ஊரிலுள தனவந்தர்
உவந்து தந்த பணத்தில்
அருகமைந்த காணி
ஆலயத்தின் உரித்தாயிற்று
தேரிழுக்க நிலமது
போதாதெனத் தானோ
விசாலமாக நிலத்தை
விரித்து விட்டால்
பார்வைக்கு கோயில்
எடுப்பாய் தெரியுமெனவோ
அடுக்காய் பணம்
கொடுத்தார் தனவந்தர்
அது சரிதான்
அவரது கொடைவள்ளல் தன்மையது
மெச்சத் தக்கது தான்.
நிலத்தைப் பெற்ற
நிர்வாகத்துக்கோ
ஏகப்பட்ட குசி
கூட்டம் போட்டனர்
இந்தப் பெரிய நிலம்
இப்படியே விட்டால்
ஊரிலுள சிறுவர்
கெந்திப் பிடிக்க வருவர்
கிரிக்கற் கூட விளையாடுவர்
நாடி வந்த இளைஞர்
கழகம் அமைத்து பந்து உருட்டுவர்

13909C
KOHA
JPL


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ட சாதிப் பயலைச் சேர்ப்பினம்
பெண் பிள்ளைகள்
தெருவில் சென்றுவர
கரைச்சல் கொடுப்பினம்
விடக் கூடாது
விரைவாய் மண்டபம் ஒன்று அமைப்பம்

என்ற தீர்மானம் ஏகமனதாய் எடுத்தாச்சு
அன்னதான மண்டபம் எழும்புது பாருங்கோ
என்ன தம்பி அன்னதானம் சிறந்ததன்றோ
ஏன்காணும் இப்பிடி எதிர்த்துக் கதைக்கிறீர்!
சொன்னால் குறை விளங்காதையுங்கோ
இந்தத் தானம் இரப்பவர்க்கன்று
சொந்த வீடும் சொகுசு வாழ்வும்
பெற்று வாழும் பெரியவர்கள்
மடிப்பு குலையா
பட்டு வேட்டி சால்வையோடு
இட்டு உண்ணும் கூட்டுத்தானண்ணை
இருந்தாலும் இயலாதவர் வந்து
உண்ணுவினந்தானே?
இருக்கும் இருக்கும்....
ஆனாப் பாருங்கோ
அன்ன தான மடம் என்று சொன்னால்
அள்ளிப் பணம் வழங்கமாட்டாரென்று
திருமண மண்டபம் எண்டல்லோ
கதையை மாத்துறாங்கள்!
ஊருக்கு ஊரு
தெருவுக்கு தெரு
இதே கதைதான் போங்கோ

புதிய காலைக்கதிர் வலைப்பூ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிங்களத்துக் காதலியே...

நெஞ்சம் நெகிழ்ந்து
நேசம் மிகுந்து
வந்ததனால்
சொந்தமாகிப் போனவளே,
இந்த நிமிடம் வரையில்
இடைவெளி நமக்குள்
இருக்க காரணம் என்ன?
படைகள் தானோ
நமக்குள்
தடைகள் அமைத்தன!
எனில்
பகைமை நம்மினத்திடை
எழ ஏது எஃது?

புரிந்துணர் வின்றி
விரித்துரைத்த செய்திகளை
நம்பியதால் தானோ
நம்மினமும் நும்மினமும்
எதிரெதிராய் போயின!
ஓ.....
அந்த நாட்களின்
துயர நிகழ்வுகள்...
வேறொரு வகையில்
இன்னமும் தொடர்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகைவர் எவரென
நாமுணரும் தருணம்
இன்றெம் முன் வந்தது
இன்றுன் நேசமிழந்த
சோகம் நினைந்தேன்.

இதுவரை காலமும்
நீ
நினைந்திரா வகையில்
நிகழ்ந்த நிகழ்வினால்
நின்மனமும் மாறியிருக்கும்
ஆழ்மனதில் புதைந்திருந்த
என்நினைவும் மீண்டிருக்கும்.

மீளநாம் இணையக்
காலம் கனிந்தது!

சிந்தையால் கவர்ந்த
சிங்களத்துக் காதலியே
சீக்கிரமே நாமிணைவோம்
மணம் முடிப்போம்
இருவர் உரிமை ஏற்று
ஆதிமுதலாய்
இன்று வரையில்
நாம் வாழும்
இனிய தீவு
நம் நாடிஃகுதெனவே
முரசறைவோம்
வா தோழி!

வீரகேசரி வார இதழ் 1988

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஊருக்கு வரேனே!

ஊரின் நினைவும் உறவின் நினைப்பும்
இல்லா மானிடன்
அல்ல எனினும்
கல்வியின் மேலே மிகவும்
காதலன் ஆகி யானே
வாழுதலாலே ஊருக்கு வரேனே!

உற்ற மனைவி பெற்ற பிள்ளை
சுற்றம் விட்டே
ஆண்டு பலவாய்
பல மைல் கடந்து வாழும்
மனிதரை நினைந்தே யானும்
வாழுதலாலே ஊருக்கு வரேனே!

தாய்க்கு மரணம் நிகழ்ந்த போதிலும்
தந்தை நோயில்
நொந்த போதும்
வந்து பார்க்க முடியா
மனிதரை நினைந்தே யானும்
வாழுதலாலே ஊருக்கு வரேனே!

மகளின் மணம் பார்க்கத் தாயில்லை!
சுற்றம் இல்லை
ஊரில் அன்றி
உலகின் ஒரு மூலையில்
நிகழும் மணத்தை நினைந்தே
வாழுதலாலே ஊருக்கு வரேனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பாசம் இழந்தே துணைவி
தன்தாய் வளர்க்க
துணையுடன் சென்றே
உலகின் மறுபகு தியிலே
உழைத்து வாழுதலை நினைந்தே
வாழுதலாலே ஊருக்கு வரேனே.

அருகில் உள்ள நாட்டில் இருந்தும்
அன்னை தங்கை
அன்பு மாந்தரை
பார்க்க முடியா வண்ணம்
வாழும் இளைஞரை நினைந்தே
வாழுதலாலே ஊருக்கு வரேனே!

காதலி பிரிவில் மெலிந்து வாடிட
கடிதம் வாசித்தே
காதலியை நினைக்கும்
மறுகரை வாழும் காதலன்
பெறுமிகு துயரம் நினைந்தே
வாழுதலாலே ஊருக்கு வரேனே!

ஊரின் நினைவும் உறவின் நினைப்பும்
இல்லா மானிடன்
அல்ல எனினும்
பலரும் பெறுமிகு துயரம்
நினைவில் நின்றே வருத்த
வாழுதலாலே ஊருக்கு வரேனே!

-இலங்கை வானொலியில் பாவளம் நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது 1986


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உணர்!

ஈடேற்றம் என்பதுவே
வழிபாட்டின் நோக்கமெனில்
அழித்தொழித்தே மாற்றார்க்கு
ஆக்கினைகள் செய்திடில்
எங்கனமோ சித்திக்கும்!

இறையோடு ஒன்றுதலே
மறைநாடும் நம்விருப்பெனில்
இறையென பிறரேற்றும்
தெய்வம் உறைகின்ற
இல்லினை அழித்திடில்
இறையொடு இணைதல்
இயலுதல் ஆகுமோ!

மானிடத்தின் மேன்மைக்கு
வழிகோலும் மதமெனில்
மானிடரின் அழிவினில்
மதமேன்மை நாட்டல்
எவ்வகை சேர்த்தி!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரம்மமே யாவுமெனில்
ஓரங்கம் ஆன்மாவெனில்
அடித்து அழித்து ஒழித்து
ஏனிந்த கூத்தோ!

வழிவேறாய் ஆகிடினும்
சேருமிடம் ஒன்றெனவே
தேருவர் எனில்
கூறுகள் அகற்றிட
பொதுமை இயலுமே!

-1994

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகில் நிற்ப்பீர்

தற்துணிவு இலாதார்
தற்கொலையில் தஞ்சமாவார்
நற்புகழ் வேண்டியவர்
விற்திறன் ஏதுமின்றி
தன்னைத் தானழிக்கும்
தன்மை பெற்றனரோ!

பிரச்சனைக்குள் வாழ்வென்ற
பிறர்மொழி கேளார்
கரச்சலுக்குப் பயந்திவர்
காலனுக்கே இரையாவர்
கண்டுபொறுக்குதில்லை
காணச் சகிக்குதில்லை!

துன்பத்தை வென்று
இன்பத்தை பெறுவதே
இந்நிலத்து வாழ்வு
இதையறியா மனிதர்
அன்புற்றார் நெஞ்சம்
அழவிட்டுச் செல்கிறார்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளவிற்கு அதிக
ஆசையினை வளர்த்து
அடைய முடியா
விடையை பெற்று
ஆகாயத்தில் பறக்க
ஆக்கினரோ பாதை!

ஆக்கம் செய்தால்
அடைதல் கூடும்
அடைதல் முடியா
ஆசைகள் எனில்
ஒழித்து விடலன்றி
ஒழிதல் அறிவீனம்!

துணிவே துணையெனில்
துயரம் ஏனெழும்
பழிப்பவர் சொற்காய்
பயனற்று வீழாதீர்
சாவே பழிப்பு
சற்று எழுமின்

எடுப்பான வாழ்வகற்றி
ஏற்றம் காணுமென்று
ஆடம்பரம் தவிர்த்து
அகிலத்தில் நிற்பீர்
பற்றுமிக வாழ்வீர்
நாடாதீர் அழிவையே.

காதல் போயினால்
சாதலே வழியென்று
முடித்திடத் துடியாதீர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலை இன்னோர்
காரிகை மேல்கொண்டு
களிப்பீர் உலகில்.

இனியும் நீவிர்
இறப்பிற் கென்று
இட்டம் கொளாதீர்
இன்றே துணிவை
உள்ளகம் ஏற்று
உலகில் நிற்பீர்!

எழுத்து.கொம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதவி

நீதியின் பாற்பட் டொழுகாது
நண்பனிற்காய்
நியாயம் எதுவுமின்றி
சரம் தூக்கி கொடுக்குக் கட்டி
நிற்றலும்
நண்பனின் மகனிற்காய்
திறமையிலினும் சிபார்சு
செய்தலும்
ஏழ்மை நிலையில் வாடும்
சகோதரர்க்காய்
தவறிய வழியில்
பொருள்
சேர்த்துத் துன்பம் தீர்த்தலும்
இட்டமுளோர்க்கு
நயம் பயக்குமெனக் கருதி
இன்னொருவர் கையொப்பம்
இடுதலும்
உறவிற்காய்
கொலையும் செய்யத்
துணிதலும்
சட்டம் தன்னை மீறி
உறவினிற்காய்
இட்டமுடன் எதையும்
செய்தலும்

276836
10 JUN 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உற்றவர்க்காய்
பொய்யாய்
சாட்சியம் அளித்தலும்
உதவியாய் இன்று மனிதர்
உவப்புடன் ஏற்பர்
உதவியின் பாற்பட் டொழுகலே
சமூக மனிதனின்
கடமை எனக் கொளின்
தவறிய வழி பெறு உதவியும்
நிறைவென ஏற்றிடில்
நீதியும் நிலைத்திடுமோ?

எழுத்து.கொம்

பொது
10 JUN 2020
மாநகர
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆச்சியும் அப்புவும்

முற்றத்து ஒற்றைச் செவ்வரத்தை பூக்கும்
முழுநிலா வானுலாவும் வைகறைப் போதில்
கொக்கரக் கோவெனச் சேவலும் கூவும்
பக்கத்துக் கோயில் மணியொலி கேட்கும்
சாணம் மெழுகிய திண்ணையில் படுத்த
அப்பு எழுந்து விடிஞ்சுது என்று
ஆச்சியை தட்டி எழுப்ப அம்மாளாச்சியென
உச்சியை பார்த்தே எழுவர் நன்றே!

ஆச்சி அடுக்களைப் பக்கம் நகர்வார்
யானைத் தீப்பெட்டி தடவி எடுத்து
குச்சி தேய்த்து குப்பி விளக்கேற்றி
பானை வைத்தே அடுப்பை மூட்ட
வேப்ப மரத்தின் கிளையினைப் பிடுங்கி
குச்சி எடுத்து பல்லு விளக்கும் அப்பு
ஆச்சி எழுந்து உமிக் கரி எடுத்து
பல்லு விளக்கி அலம்புவர் நயந்தே!

சொம்பு எடுத்து தொழுவம் சென்று
பசும் பால் கறப்பாள் ஆச்சி
கொம்பு பிடித்து உதவுவர் அப்பு
சாணம் பெறுக்கி எருவாக்க இடுவர்
குத்தூசி எடுத்து பலாமர இலையை
தொட்டுத் தொட்டு சேர்ப்பர் சிறப்பாய்
வீட்டுத் தோட்டத்தில் பாத்தி கட்டுவர்
துலா மிதித்து நீரிறைப்பர் உவந்தே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திராட்ச மாலை மணிகள் தடவி
மந்திரம் உச்சரித்து சிவசிவ என்பர்
வேய்ந்த ஓலை இடுக்கில் சங்கெடுத்து
ஒலிநாதம் எழுப்பி ஓம் எனச் சொல்வர்
பாக்கு உரலெடுத்து பக்கத்தில் வைப்பர்
டொக்கு டொக்கு என்றே இடிப்பர்
வெத்திலை சுண்ணாம்பு சேர்த்தே சப்புவர்
சிவப்பாய் துப்புவர் சிரிப்பர் சிவந்தே!

வீட்டுப் புறத்தில் கொட்டில் இருக்கும்
முகட்டில் கட்டித் தூங்கும் வெங்காயம்
வயல் வெளியில் மிளகாய் சிவக்கும்
வீட்டறைக்குள் கல்லுப் பெட்டிக்குள் நெல்லிருக்கும்
முறியில் முட்டியில் தயிர் இருக்கும்
கத்தரியும் வெண்டியும் தோட்டத்தில் சிரிக்கும்
இயற்கையுடன் இசைந்த வாழ்வில் இலயிப்பர்
பேரன் பேத்தியொடு ஆச்சியும் அப்புவும்

தாயகம்
பணிப்புலம் இணையம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாங்கள்

புத்தி பேதலித்து
புரிந்துணர்வு இன்றி
திரிகின்றோம் தெருவில்!
விருத்தி இல்லை
ஒரு
முயற்சி தானுமில்லை
அயற்சியினால் அழுகின்றோம்!
பயிற்சி என்று போகிறார்
பயந்து நாமும் வாழ்கிறோம்
வியத்தகு செயல் கண்டு
விமர்சித்து திரிகிறோம்.

தெருக் கூத்து
இராத் திருவிழாக்கள்
கண்டு கனநாளாச்சு
ரீவிதானிப்போ
கண் கெட்டுப் போச்சு.
படிப்பு
பத்தோடு போச்சு
பாஸ்போட் தானிப்போ
எங்கள் தகைமை
ஏஜென்சி தானிப்போ
வேலை தரும் வங்கி.

பொழுது போக்குக்கு
வழியெங்கு என்ற
தேடுதல்...
அரட்டை அடிப்பதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரைப் பொழுது போகும்
கடதாசிக் கூட்டம்
விளையாட்டில் சிலபேர்
தெரியாதவர் திண்டாட்டம்

பள்ளிக்குச் செல்லும்
வெள்ளைகள்
பார்த்துக் களிக்கும்
காளையர் நாங்கள்
வேறென்ன வழி
காலைப் பொழுது போகும்.
சோம்பேறி என்பர்
சிலபேர்
பெண்பித்து என்பர்
பலபேர்
தண்டல் என ஏச்சு
என் வீட்டில்!
வாழ்வதற்கு எங்கே
இடம்
செய்வதற்கு எங்கே
வேலை
எல்லாவற்றுக்கும் மேல்
நிம்மதி!

விடிவினை வேண்டிக்
கரைகின்றோம்
எனிலும்
ஒரு முயற்சி யின்றி
வாடுகின்றோம்.

ஆதவன் –கையெழுத்து இதழ் 1984


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனுபவம்

பலவருடப் படிப்பின் பயன்
ஈரிரண்டு வருடங்கள் காத்ததில்
எனது மண்ணில் கிடைத்தது
ஒரு வேலை!

யாழ்ப்பாணம் குழப்பம் மிகுஇடம்
எனச்சொல்லி
கொழும்புக்கு மாற்றம் கேட்கும்
ஊழியர் நிறைந்த காலம்
யாழ்நகர் அமைந்த ஆசுபத்திரியில்
கிளாக்கர் எனப் புது நாமம் எனக்கு!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாண்டிக்குளம் தாண்டி வந்த சேதி
பேப்பரிலும் போட்டார்கள்
மூவர் எழுதுவினைஞராய் சேர்ந்த போதிலும்
ஒருவரே வந்து சேர்ந்தார் என!

வேறென்ன வேண்டும்
அயல் வீட்டுப் பெரியவர்
பேப்பரில் பார்த்தேன் பெயர்
என்றபோது
சந்தோசித்தேன்!

வேலை-
பேப்பர், பென்சில், பேனா
கோப்பு, கொப்பி, படிவம் எனச்
சூழ இருக்கையில்
நினைப்பு பெரிது!

மாதம் இரண்டாயிரத்து இருநூறு
சம்பளம்
இரண்டாயிரம் அம்மா கையில்
திணித்த போது
பூரிப்பு அம்மாவிற்குள்!

முன்பிருந்த நச்சரிப்பு
சோம்பேறி என ஏச்சு
தண்டச் சோறு எனல்
எல்லாம் போச்சு.
பரிவு பாசம் பற்றுமிக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நானே ராஜா!

என்ன இருந்தாலும்
உழைப்பிற்கு மதிப்புண்டென
உள்ளுக்குள் நினைத்தேன்!
தொடர்ந்த மாதங்களில்
சேட்டு ரவுசர்
சொந்தப் பணத்தில் வாங்கல்
தேனீர் வடை கடையில்
கூடி நண்பருடன் உண்ணல்
காசதிகம் எனிலும்
சொந்தப் பணத்தில்
அனுபவம் புதிது.

வாசிக்கப் புத்தகங்கள்
வாங்கப் பயமில்லை
அம்மாவின் பணம் திருடி
புத்தகங்கள் வாங்கி
ஏச்சுக்கள் வேண்டிய
அனுபவங்கள் பலவுண்டு!

சொல்லிக் கொள்ள வேலை
கையில் பணம்
பூரிப்புத் தான்
எனிலும்-
அடுத்தவர் அனுபவம் நோக்கில்
துணையென ஒன்றுவர
மழலைகள் அழுகைகள் தொடர
நிலமைகள் வேறாய் மாறலாம்
அனுபவம் பிறிதாய் தோன்றலாம்!

1991



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எழுத விடுங்கள்

எழுத விடுங்கள்
உனதும் எனதும்
உறவினில் திழைத்த கனவினில்
எழுத விடுங்கள்
அன்புடன் உன்னை நோக்குவதையும்
ஆவலுடன் நீயெனைப் பார்ப்பதையும்
இன்புடன் நாளைய உயர்விற்காய்
எமதிருப்பினை நிலை நிறுத்திட வென
ஏங்கிடும் எங்கள் ஏக்கங்களை
எழுத விடுங்கள்

சாதியம் எம்மை நொருக்கிடும்
இனபேதம் எம்மைச் சிதைத்திடும்
மொழிபேதம் எமது உறவை குலைத்திடும்
இன்றைய காலம் ஒழிந்திட
எங்கள் நினைப்பினை-
நோக்கினை
எழுத விடுங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருமொழி உடைய நம் தேசம்
இருவேறாய் சிதைந்திட- சிதைத்திட
அழிந்தபின்- அழித்தபின்
உலகின் அங்கீகாரத்திற்காய்
உலாப் போவதேன்
எம்மை நாமே
அடகு வைப்பதேன்
எங்கள் இன்பம் குலைப்பதேன்
உன்னை நானும்
என்னை நீயும்
அதிகாரமில்லா அன்பினில்
அங்கீகரித்து வாழ
எனதெண்ணத்தை
எழுத விடுங்கள்.

அன்றெம் நேசம் குலைத்தவர் எல்லாம்
இன்றெம் உறவினை
புதுப்பிப்பதாய் வந்துபோகிறார்
சந்தை வேண்டும் அவர்க்கு
சிந்தையில் அதனை நிறுத்தியே
அமைதி வேண்டி நிற்கின்றார்
பிச்சை தந்தே நிற்கின்றார்
எமதுழைப்பில் நாம் வாழ்வோம்
உயர்வோம் என்றும் மகிழ்வோம்
எனும் என் நினைப்பை
என் முயல்வை
எழுத விடுங்கள்.

எழுத்து.கொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA-JPL

## ஏனுந்தக் கலாசாரம்?

உண்மைகள் கசக்கத்தான் செய்யும்
நன்மைகள் விளையும் என்ற
எதிர்பார்ப்பில் தான் எல்லாம்...
யாழ்ப்பாணத்துக் கலாசாரம்
யாழ்ப்பாணத்துக் கலாசாரம்
என்று வாய் கிழியக் கத்தல்
எதிர் வீட்டில் கலியாணம்
எடுப்பாய்க் காட்டிச் செய்தனர்
என்றால்
தன்வீட்டில் தன்பிள்ளைக்கு
இன்னும் அதிகம்
எடுப்பாய்க் காட்டச்
செய்வதுவோ
எங்களது கலாசாரம்?
முத்துப் பந்தலும்
மூக்கில் விரலை வைக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடபுடல் வீடியோப் பதிவும்
உடன் வருமோ ஆயுளுக்கு
கடன் பட்டு
சோக்கு காட்டிப்போட்டு
வீட்டில் வரிசையாய்
கடன் கொடுத்தவர்
நின்றால்
அக்கம் பக்கம் என்ன நினைக்கும்
பெருமை எதுவென அறியாப்
பெருமையுள் ஆட்பட்டு
ஏனிந்த ஆட்டம்
பாட்டம் கூத்து...
சோக்குக் காட்டி
மணம்முடித்து வைத்து
உமக்குள்
மகிழும் பெற்றோரே
கூடி இணைந்த
மணமக்கள் தமக்குள்
கூடி மகிழ்வு கூட்டவென்று
ஒரு ஐம்பதினாயிரம்
கைக்குள் திணித்து
கனிமூன் சென்றுவருக
என்று வழியனுப்பி வைக்கும்
பழக்கம் உமக்குள் உள்ளதுவோ...
இல்லை, இல்லை... என்றால்...
ஏனுந்த கலாசாரம்...?

புதிய காலைக்கதிர் வலைப்பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனிதம் எங்கே?

தெருவில் இறங்கி
மனிதத்தைத் தேடுகிறேன்
உருவில் அன்றி
உணர்வில் காணேன்!

விரக்தியின் விளிம்பில்
தெரிவது உலகம்
பூசலின் அழிவில்
பூரிக்கும் மனிதர்!

இனங்கள் குலங்கள்
மனங்கள் குளங்கள்
தினங்கள் மறையும்
சனங்கள் அழியும்!

பிணமோ நாட்டில்
குணமோ ஏட்டில்
பணமோ ஆட்சியில்
கணமோ சிரிக்கும்!

தூங்கும் மனிதம்
விழிக்கும் நாளில்
களிக்கும் உலகம்
தெளிக்கும் இன்பம்

புதிய காலைக்கதிர் வலைப்பூ


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

KOHA
JPL

## மொழியெலாம் ஒன்றே

மொழியெலாம் ஒன்றே, இதில்
கழிவொன்றும் இல்லைக் காணும்
இழிவாக நமக்குள்ளே ஏன்
இனப்பூசல் வேண்டாம் விடும்.

எம்மொழியே சிறந்த தென்றே
தம்பட்டம் அடிக்கும் நிலை
இம்மட்டும் போதும் அப்பா
இனப்பூசல் வேண்டாம் அப்பா

முன்னாளில் நாமெல்லாம் ஒன்றே
முகத்தினில் சைகையினால் நன்றே
அகத்தின் கருத்தைச் சொல்வொம்
அதனால் நாமெலாம் ஒன்றே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலத்தினில் வேறுபாடு தன்னால்
நிலவிடும் மொழிகள் பலவாய்
நீண்டு போயின் றுலகில்
நிலவும் வேற்றுமை ஆயிற்றே

எம்மொழி பேசினாலும் எங்கள்
உள்ளக் கருத்தெலாம் ஒன்றே
உண்மை இதுவென புரியில்
உலவும் வேற்றுமை இலையே!

"எம்மொழியும் நன்றே! அதேபோல்
உம்மொழியும் நன்றே!" என்ற
எண்ணம் கொண்டிங்கு வாழில்
எல்லார் நலனும் ஓங்கும்!

நன்கிதை அறிந்து கொண்டால்
நன்மை எமக்கு பலவாம்
அன்பினால் ஒன்றாகி நாங்கள்
அகிலத்தில் நன்றே வாழ்வோம்!

இன்றே விடுவீர் மொழிமோகம்
இன்னோர் மொழியை பழிக்கும்
தன்மை ஒழித்து நீவிர்
இன்புற்று வாழ்வீர் உலகில்!

புதிய காலைக்கதிர் வலைப்பூ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடவுளை நீ....?

நானுழுத நிலத்தை
உனதென்றாய்
எனது வீட்டை
உனதென்றாய்
நான் மிதித்த தெருவை
உனதென்றாய்
பொது மண்டபங்கள்
நூலகம்
யாவும்
உனதாளுமை என்றாய்
மீதமிருந்த
ஆலயத்தை
அழித்தாய்
எனது இருப்பை
எனது வாழ்வை
நிர்மூலமாக்கும் உன்னை
அழிக்க நினைத்தேன்
உற்றதுணையென
எனக்கிருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாட்டை அனுப்பினேன்
உனைச் சிதைக்க...
மாடோ உனக்குச்
சேவகம் செய்தது
நானனுப்பிய மாடு
என்னையே
கொல்ல முனைந்தது.
வேறு வழியின்றி
நானே உன்னைக்
கொல்ல விளைந்தேன்
நீதி, நியாயம்
நான் படித்த புத்தகங்கள்
எல்லாவற்றுக்கும் மேல்
எனது மாட்டுக்கே
நான் அஞ்சினேன்.
கடவுளின் ஆசீர்வாதம் வேண்டி
நான் சென்றபோது
கடவுளை நீ
ஆசீர்வதிக்க கண்டேன்.

வார்ப்பு.கொம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காத்து நின்றேன்

ஊரில் ஒரு நாள்
உறங்கும் நேரம்
கள்ளு வயிற்றில்
தெருவில் நடனம்
வீடுகள் எல்லாம்
இருளில் மிதந்தன
மின்சாரம் இல்லா
தெருக்கள் கூடக்
காடாய் கிடந்தது.
இயங்குதல் இன்றித்
தவித்தேன்
தடவித் தடவி
தெருவைக் கடக்க
குடிசை இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குச்சு ஒழுங்கை
கல்லுத் தடக்கி
விழுந்து எழுந்தேன்
குடிசையை நோக்க
கூர்மை பார்வையில்
தீக்கதிர் வீச்சு
புகை மண்டலம்!
விக்கித்துப் போனேன்
எனது குடிசை
எரிந்த தெங்கனம்?
கால்கள் நடந்தன
சத்தம் எழுந்தது
ஆத்திரம் நெஞ்சில்!
உயிர்த்தேன் நான்
நெஞ்சில் ஓருறுதி
நிலைத்து நிற்க
கொடுமை எதிர்க்கும்
துணிவில் எழுந்தேன்
காத்து நின்றேன்
கயமைத் தனத்தில்
ஊறிய மனிதரை
நெருங்கத் துணிந்தேன்.

எழுத்து.கொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடனெனச் சுமைகள்

காலையில் எழும்புகையில்
கடைத் தெருவில் நடக்கையில்
கந்தோர் வேலையில்
மனம் சலிக்கையில்
தொல்லை வாழ்வின்
தொலையா கவலைகள்
மறக்கவென
தொலைக்காட்சி முன் இருக்கையில்
அலைபேசியில்
அன்புறப் பேச முனைகையில்
நாகரிக வாழ்வின் நயப்பில்
மகிழுந்தியில் மலர்ந்த முகத்தொடு
காப்பெற் வீதியில் வலம் வருகையில்
ஆடை வனப்பில் மகிழ்ந்து
மெழுகிய முகத்தொடு
புன்னகை புரிந்திடு மனையாள்
இடை வளைக்க எண்ணுகையில்
எதிலும் எங்கும் எப்போதும்
துரத்தும்
கடன் கொடுத்தவர் முகங்கள்...
தொடக்கமும் முடிவுமிலாத்
தொடர் கதையாய்
கடனெனச் சுமைகள்!

எழுத்து.கொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடர்பறுந்த பட்டமாய்...

பொய்யாய் அழுதென்ன
மெய்யற்ற உயிர் வாழ்வென்ன
பொதுவில் அன்பில்லா அலட்சியம்
சுருங்கிய உலகுள்
அயல் என்னவோ அதிகதூரம்
ஆருக்கு ஆர் சொல்ல
பேருக்குத் தான் இப்போ உறவுகள்
பாருக்குள் பழகிய முகங்கள்
பல பக்கங்களிலும்...

ஆயினும்
அயல் வீட்டு முகவரி தெரியாத் தொலைவுகள்
நன்றாய் ஆர் சொல்வார்
நட்புடன் பழகா அயலெனில்!

தொன்று தொட்டு
தொடர்ந்த பந்தம்
இன்றோ,
தொடர்பறுந்த பட்டமாய்
எங்கோ
ஒரு மரத்தில் தொங்கியபடி!

எழுத்து.கொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொழிலாளி வாழ்க்கை போல்...

நேற்றுத்தான் வந்திருந்தான்
வங்கியில் தொழில் புரியும் நண்பன்
முகத்தில் ஒளியில்லை
அகத்தில் மலர்வு இல்லை
வாட்டம் என்ன என்று கேட்டேன்
சலித்துக் கொண்டான்
எடுத்தவர் கொடுப்பதில்லை
கொடுப்பவர் எடுப்பதில்லை
பொடி வைத்துப் பேசினான்.
என்னடா என்றேன்.
சொல்லி மாளாது என்றான்.
உனக்கென்னடா மச்சான்
உத்தியோகம் கௌரவம்
எனக்கப்பிடியா என்றான்
வங்கித்தொழில் தானே
வாய்ப்பானது எண்டு
வாய் பிளக்கிறார்கள் என்றேன்.
நித்திரை வராது மச்சான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நித்தம் ஒரு பிரச்சனை
ஒன்றச் சரிக்கட்டினா
இன்னொரு பூதம்
புதிசாக் கிளம்பும்.

பூதத்தையும் சரிக்கட்டி
சட்டைப் பொக்கற்றுக்கை வச்சா
மற்றப் பக்கத்தால
சுனாமி ஒன்று கிளம்பும்...

சின்ன வயதிலை எங்களோட படிச்சானே
சின்னான் சின்னான் எண்டு சொல்லுவமே
சீமெந்து குழைச்சு அப்புற வேலை
கடன் கேட்டு வந்தவன்
உடன் பட்டுட்டன்
உண்மையைச் சொன்னா
அவன்ர வாழ்க்கை தான் வாழ்க்கை
என்றவன் சொல்ல
தொலைபேசி அழைப்பு எனக்கு.

பேசிமுடித்த எனது முகம் இறுகுகிறது.
என்னடா என்றான் நண்பன்
பணிப்பாளர் பதவியிலிருந்து மாற்றமாம்
மாகாண அலுவலகத்திற்கு போகட்டாம்
ஏனடா மச்சான் என்ன நடந்தது
எல்லாம் மேலிடத்துச் சமாச்சாரம்
என நான் சலிக்கிறேன்.

எழுத்து.கொம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தெய்வமும்....

காதில் தோடில்லை
கையில் வளையல் இல்லை
காலில் வலிமை இல்லை
முகத்தில் ஒளிர்வு இல்லை
அகத்தில் நிறைவு இல்லை
அவளிடம் நானோ
எப்படிக் கேட்பேன்
அடைவு வைத்த நகையை
மீட்குமாறு...
நானோ
வட்டிக் கடைத் தொழிலாளி..
அவளோ..
நடையில் தளர்வுடன்
உடையில் ஏழ்மையுடன்
குரலில் வெறுமையுடன்..
அரசு தந்ததில்லை பணம்
கடன் பட்டே கட்டினம் வீடு
மீளாக் கடன் சுமைக்குள் வாழ்வு
நகை விற்றுப் பணம்
மிஞ்சுமென்றால்
அப்படியே செய்யலாம்
என்றாள் அவள்..!
வள்ளல் தன்மை
வாய்த்தவர் யாரும்
வழங்காரோ தர்மம்..



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறம் காக்க என்றமர்ந்த
அம்மன் முகம் மலர்ந்து
அருளை வழங்க என்று
அள்ளிப் பணம் கொடுத்திட
ஆயிரம் பேர் உளர்
தங்கமாய் மின்னும்
அம்மனது மேனி ...

அந்த அம்மன் மனமிரங்கி
இந்த பெண்ணின் துயரம்
போக்க வருவாரோ

அம்மன் அருள் ,
அந்த செழுமையில்
வளம் கொழிக்கும்
மாந்தர்க்கு என
மட்டுந் தானோ?

ஏனோ இந்த வேற்றுமைகள்
அள்ளி வழங்கினால் தானோ
அம்மன் மனமும் குளிரும்..
கடன் சுமைக்குள்
வீழ்ந்த மனிதரிடம்
அறா வட்டி பெறும்
அவர்க்காய் தானோ
தெய்வமும் அருளும்!

எழுத்து.கொம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீட்சியை நோக்கி...

சத்தியம் இன்று சரிந்ததுவோ
புத்தியும் இன்று புன்மைப் பட்டதுவோ
எத்தர்க்குள் புத்தி பூட்டுப்பட்டதோ
வித்தர்கள் எல்லாம் விருத்தி இழந்தனரோ?

மாந்தர்க்கு என்ன மனம் இல்லையா
மனிதம் இழந்து மாக்கள் ஆனரா
புனிதம் இழந்து புகழும் இழந்து
மாக்களிலும் கீழாய் இழிந்தே போயினரோ?

ஏனிந்த வீழ்ச்சி?
எழுச்சி பல கண்ட மக்களினம்
புகழ்ச்சி பலபெற்ற மக்களினம்
வீழ்ச்சிக்குள் சிக்குண்ட தெங்கனம்?

மக்கள் பெருக மனங்கள் பெருகி
ஒன்று மற்றதிலும் வேறுபட்டு வேறாகி
திக்குகள் மாறிய சிந்தனை பெருக
குலங்கள் தோன்றி குதர்க்கம் பெருகின!

தனித்து வாழல்
தானே பெரியன்
இனித்த வாழ்வு
சிலர்க்கே என்று
சிறுமை உணர்வே
பெருகிப் போக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடையார் இல்லாரென
உருவான பிரிவினைகள்!

தமக்கே உலகென
தருக்கம் செய்து
முட்டி மோதிட
பிறந்தன போர்கள்!

கொள்கை வழிகள்
கோட்பாடுகள்
மெய்க்குள் கூறுபாடுகள்
வளர்ந்திட வளர்ந்திட
தோன்றின மதங்கள்
மமதை எழுந்திட
மரணம் பெருகின!

மொழிகள் தோன்ற
கருத்துணர் மக்கள்
இனமாய் ஆயினர்
கருத்துணரா மக்களை
வேறினமாய் கொண்டனர்
வேற்றுமையை காட்டினர்.

முடியாட்சி என்றும்- ஒரே
கொடியாட்சி என்றும்
எண்ணங்கள் தோன்ற
நாடு பிடி படலம் தொடர
அடிமைகள் பெருகினர்- பலர்
அறிவினை ஒழித்தனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவியல் வளர்ந்திட
நொடிக்குள் பலரையும்
இலகுவில் கொல்லும்
ஆயுதம் செய்தலே
அறிவியல் பயனானது.

ஜனநாயகம் மலர்ந்திட
கட்சிகள் தோன்றிட
லஞ்சம் ஊழலென
புதிய பரிமாணங்கள்!
கட்சி குட்டிபோட பெருகிவிட்ட பிரிவினைகள்
நிதி அழிதலன்றி நிலைத்த தொன்றில்லை
நீதி பிறழ நீடித்த துன்பங்கள்!

கொலைகள் கொலைகளெனப் பெருக
விலையற்ற எம்வாழ்வு வீணாக
தொலையாமல் துன்பங்கள் சூழ்கின்றன.

பிரிவுகள் பிரிவினைகள்
வேற்றுமைகள் வேறுபாடுகள்
தந்திட்ட துன்பங்கள்
தடுத்திட வழியிலையோ?

கூடி நாடித் தேடல் இன்றித்
தனித்துத் தேடிடில்
கிடைக்குமோ இன்பம்?

அமைதி குலைந்த வாழ்வு
அனுதினமும் மரண சிந்தனை
குமையும் மனம்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கினாலும் முடியாது
தனித்த சிந்தனைகளால்!

மின்சாரம் போன்றதல்ல அமைதி
நிலையாக வேண்டும் அமைதி!

மீட்சி வேண்டிக் கரைகின்றோம்
மீள வாழத் துடிக்கின்றோம்
ஆயின்,
வெட்கி வாழ்தல் வேதனையில் வீழ்தல்
அச்சப்படல் அடங்கிப் போதல்
பஞ்சப் பட்டு வீழ்தல்
துஞ்சுதல் துயருறுதல்
எஞ்சித்தும் ஏதுமினி யில்லை
என்றோர் காலம் எழுந்திட
பல்லாண்டு காலம் முன்னே
நமது முன்னோர் கண்ட இன்பம்
நமது வாழ்வில் நமது காலத்தில்
நாமே காண விழைவோம்.

- தோழர் மணியத்தார் ஓருமாத நினைவஞ்சலியின்போது
சுழிபுரம் சத்தியமனையில் கவிஞர்க்கு கவிஞர் முருகையன்
தலைமையில் கவியரங்கில் ஒலித்தது- 1989



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பண்பாடு உயரப் பாடு

எட்டயபுரத்து கவிஞன் பாரதிக்கு
இட்டமுடன் விழவெடுக்கும்
இருபாலை மண்ணுக்கென் வணக்கம்
முத்தான இக்கவியரங்கிற்கு தலைக்கவி
மூத்தகவி முருகையன் அவர்க்கும்
சந்தக் கவிபாட வந்த உயர் கவிஞர்க்கும் வணக்கம்
இந்த அரங்கின் சுவைமிகு கவிபருக
வந்த அவையோர்க்கென் அன்பு வணக்கம்.
நான் பெருங்கவி இலன்
பெரும் புகழ் பெறும் நோக்கும் இலன்
அரங்கக் கவி பாடும் வலிமை இலன்
பாடு எனத் தணிகையர் பணித்ததால் வந்தேன்
பொறுத்தருள்வீர் சிறியோன் கிறுக்கிய கவி
கவிதையாய் அன்றி உரையாய் மலரும்
நல்கவி என் பின் வரும் கவிஞர் தருவர்
என்வீட்டில் தன்பாட்டில் ஓடுகிறது வாழ்க்கை
ரீவியே உலகாகிப் போச்சுது இப்ப
குழந்தைகள் சிறார் இளவட்டம் மத்தியத்தர்
வயோதிபர் கிழடுகட்டைகள் எல்லாம் இப்ப
ரீவிப் பெட்டியே கதியாய் கிடப்பர்
விருந்தினர் பெரிதாய் வருவதில்லை
அயல் வீட்டாரும் முன்புபோல் வருவதில்லை
வந்தால் சிடீ இருக்கா என சிரிச்சபடி கேட்பர்
வந்த சினிமா பற்றியே பேசிச் செல்வர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாய் அகமகிழ்ந்து குசலம் பேசி
அமரார் அதற்கெங்கே நேரம் அவர்க்கு!
ரிவியில் ரெலிராமா போகும் பாருங்கோ
ரண்டு பெண்டாட்டி யொடு வாழ்வ தெப்படி
எண்டு கற்றுத் தரும் உமக்கென்றால்
நிண்டு நானிதிலை பண்பாடு பற்றிப் பேசினால்
என்னெண்டு தான் அதைக் கேட்டு நடப்பீர்.
பேசிப் பயனில்லை யார் விதைத்த தெல்லாம்
புதிய உலக ஒழுங்கு முறைக்குள் நிண்டே
பேசித் தீர்க்க எண்டே நாமும் சென்றால்
எனிப் பேசிப் பயனில்லை விடும் என்பீர்
உலகம் தன்பாட்டில் சுழல வில்லை
உலகப்பன் விருப்பப் பாட்டில் சுழல்கிறது
நாமும் அப்பாட்டில் சுழல முயன்றிடில்
எப்படிப் பண்பாடு உயர்ந்திடப் பாட!

இரண்டு பட்டுக் கிடந்த உலகம்
இன்றோ ஏகம் பிரமம் என்கிறது.
ஒன்றே உலக பிதா என்கிறது
நன்றே அதைத் தொழுது ஏற்றிடலே
உலகோர் கடன் எனக் கூறுகிறது
உவப்புடன் மானிடர் வாழ்ந்திட
உற்றவழி ஒன்றே அதனைத் தேர்ந்து
பெற்றுச் செல்க எனச் செப்புகின்றனர்
இதுவே புதிய ஒழுங்கு முறை எனில்
அநேகமாய் எமக்குள் ஆக்கிய தத்துவம்
அனைத்தையும் குழிதோண்டிப் புதைக்க
ஒப்புவோம் எனில்
பண்பாடு உயர்ந்திட எப்படிப் பாடிட!

276836


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டாடும் இடத்தினில் தெய்வம் வை
துதி போற்று ஏற்றித் தொழு
தொடங்கு உன் கருமம்
தேவானந்தம் அடைந்தபின்
மகேஸ்வரப் பேறுபெற்றோம்
ஆச்சு எங்கும் சாந்தி நிலவுகிறதென
ஆலயம் அனைத்தும் புதுக்குவோம்
குச்சு ஒழுங்கை எங்கும் தேடி
ஊடு கண்ட கோயில் எல்லாம்
ஊக்க அரசு உளதெனக் கண்டு
தேறித் தெளிந்து பணி செய்வீர்
பஞ்சப் பாட்டில் மக்கள்
வெஞ்சினத்தில் போராடி மடிந்த
மக்கள் துயரில் அன்னையர்
போரில் சிக்கி மடிந்தும்
காணாது போயும்
ஊரான ஊரை இழந்துள்ள
பேரை நினைந்து யாரும்
இயற்றுவதில்லை எதுவும்
யாரோ வருவார் எமைக்
குண்டு போட்டழிக்கப்பண்ணும்
பேர்கள் வருவர் எனப் பார்த்து நிற்பர்
எனில்
பண்பாடு உயர்ந்திட எப்படிப் பாடிட!

சமூகம் உயரப் பாடுபடு
சரித்திரம் உன்னை மறவாது
பேர் பொறிக்கும்
உவந்து ஊர் போற்றும்
அரியணை ஏற்றுவர் மக்கள்
கரிசனை தன்னில் வைத்தே இன்று
ஊரினுக்காய் பாடுபடும் பேர்கள் பாரீர்
ஜே பி பட்டமே அவர் குறி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவை எதுகும் செய்தல் இன்றியே
சேரும் பட்டமெனில்
இட்டமுடன் நானும்
எப்படி
பண்பாடு உயர்ந்திட பாடிட!

பெண்டிர் பெறுக விடுதலை என்றே
பாடினான் நம் பெருங்கவி பாரதி
வீட்டினில் அடங்கிய பெண்கள் இன்றோ
வீதிக்கு வந்தனர் மகிழ்ச்சி
ஆணுக்கு நிகர் பெண் என்றான் பாரதி
இன்றோ
பெண்ணுக்கு நிகராய் ஆண்கள்
நகை நட்டணிந்து நளினம் காட்டுகிறார்
பெண்ணுக்கு அழகூட்டல் சுமையென்றேன்
ஆண் அழகூட்ட நகையணிகின்றார்
ஆண்மையின் பெருமையை இழக்கின்றாரா?
உடல் வலிமை காட்டி உழைக்கும்
காலம் போச்செனில்
ஆண்மை இப்படி ஆச்செனில் எப்படி
பண்பாடு உயர்ந்திடப் பாடிட!

சாதி இல்லை எனப் பாரதி சாற்றினான்
சாதியம் சரிந்தது
புதிதாய் 'சமூகம்' முளைத்த து
அதிஉன்னதம் பார்த்து வியந்து
பற்று மிக க் காதல் கொண்டால்
என்ன சமூகம் அவன் என
ஆராய்ந்து வேண்டாம் விடு என
பெண்ணுக்கு அட்வைஸ் பண்ணும்
பேர்வழிகள் அதிகம் கண்டீர்

பொது நூலகம்
10 JUN 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதலால்
பண்பாடு உயர்ந்திட என
எப்படிப் பாடிட!

திருவிழா வந்ததால்
திறந்தது ஏ-நைன் பாதை என்றதால்
உலகெலாம் நிறைந்த உறவினர் வந்தனர்
வீடெலாம் நிறைந்து களித்தனர் தங்கள்
பிள்ளைகள் டமிழ் பேசிட கூசி நிற்க
அவர் மொழி பேசிடப் பார்த்து வியந்தோம்
கணனி யுகத்தில் ஆங்கிலம் தெரியா நாம்
வெக்கித்து நிற்கின்ற காலத்தே
எப்படிப் பண்பாடு உயர்ந்திடப் பாடிட!

ஐந்து வயது என் மகனுக்கு
அரிவரிப் படிப்பில ஆவல் இல்லை
அயல் வீட்டில் சாமத்தியச் சடங்கில்
பொக்ஸ் வைத்துப் பாட்டுப் போட
ஒப்போட்டல்லோ ஆடுகிறான் டிஸ்கோ
பாரதி யாத்துத் தந்த
பாப்பாப் பாட்டைப் பாடென்றால்
பாபா ஸ்டைலல்லோ காட்டி நிற்கின்றான்
தப்பாய் எல்லாம் போச்செண்டால் பிறகு
எப்படிப் பாட பண்பாடு உயர்ந்திட!

பாடுபாடென்றால் எப்படிப் பாடிட
பாடிப் பயனில்லை
பாடுபடில் பயனுண்டு
பண்பாடு உயரப் பாடுபடில் பயனுண்டு
பாடுபல பட்டு இந்த
கூறுபல பட்டுள்ள உலகை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றி விடில் பயனுண்டு
தேறி உண்மை அறிவொடு
தேயங்கள் உள்ள மாந்தர் எல்லாம்
கூடி உலகு நமது என்ற
உணர்வு ஓங்கி
நாட்டி வைக்க வேண்டும் பொதுமை நெறி
பாட்டில் அன்று பாரதி பாடிவைத்தானே
முப்பது கோடி முழுமைக்கும் பொதுவுடமை
எல்லா மாந்தர்க்கும் வேண்டும் பொதுவுடமை
மாந்தர் எல்லாம் கூடி மகிழும் வண்ணம்
மண்ணில் புது மக்கள் பண்பாடு மலரணும்
சாதி வெறி கொண்டு தூக்கிய ஆயுதங்கள் வீழ்க
மதவெறி கொண்டு தூக்கிய ஆயுதங்கள் வீழ்க
இனவெறி கொண்டு தூக்கிய ஆயுதங்கள் வீழ்க
கரங்களை இணைப்போம் சமத்துவம் ஓங்க
கரங்களை இணைப்போம் மனிதம் காக்க
கரங்களை இணைப்போம் பண்பாடு உயர!

-இருபாலை பாரதி கலாமன்றம் நடாத்திய பாரதிவிழாவும் 40வது
ஆண்டு விழாவும் நிகழ்வில் கவிஞர்க்கு கவிஞன் முருகையன்
தலைமையில் 11.09.2003 அன்று ஒலித்த கவிதை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம் அழிவது ...?

ஆங்கிலேயர் காலத்துப்
பிரித்தாழும் சூழ்ச்சி அறிவீரோ
எங்களது இளமைக் காலத்தில்
போர் என்றால் போர் என்று புகன்றது
யார் நலனிற்காய் எனத் தெரிவீரோ?
தேசத்து மானிடர் வீரத்தில் மாண்டதில்
நலம் பெற்றார் யாரென ஓர்வீரோ?
பார் போற்றும் வகையில்
தீய்வதை ஆசியத்து அதிசயமாய் ஆக்குவதில்
ஆவது யார்க்கு பெருநலமென புரிவீரோ?

தேசம் அழகியதெனில்,
சொர்க்கம் இம்மண்ணில் உளதெனில்,
ஆளுமை யார்க்கும் வாய்த்த தெனில்,
வாழும் யார்க்கும் இது ஓர் நாடெனில்
இன மத குல வேறுபாடின்றிப் பிழைப்பிற்காய்
சட்டம் மீறி நாட்டை விட்டோடும்
குடியானவர் நலனில் உண்டோ எண்ணம்
இறைமை தனை ஏற்றோர் யார்க்கும்!

இறைமை இழந்தோர் இயலுமோ வெல்தல்?
தேர்ந்தால் கரம் சேர்ப்பர் மனிதர்!
'சர்வ தேசம்' பொடிபடப் பொடிபட
பேர்த்து எறிகின்ற ஓர் நோக்கில் நின்று
ஆர்த்தெழுந்தால் வேரொடு வீழும்!
அழிவில் ஒருகால் ஆனந்தம் அடைவர்,
நல்லவர் வாழ்வர்; தீயவர் அழியின்!

தாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரங்கள் இணைப்பமே!

ஏனிந்த வேதனை
ஏனிந்த பாரபட்சம்
ஏனோ உலகில்
உயர்வு தாழ்வுகள்
தானே உலகதில்
தரித்ததுவோ வேற்றுமைகள்
யாரோ எமக்குள்
கூறுகள் அமைத்தவர்
நாளை நமக்கென
ஆக்கிடும் நோக்கதில்
பாதையை வகுத்திடும்
பயணத்திலும் இடையூறுகள்...
நமை மீட்டிட
நாமே எண்ணுகையில்
தேறி நீரறியீரோ என
தேயத்து இழப்புக்கள்
ஆயத்தில் காட்டுவார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்பர் யாரோ எனக் கருதியதில்
தேட்டம் இழந்த
வாட்டம் போதுமென
கிடப்பமே சிவனேயென..
சுற்றம் அழிந்ததன்
காரணம் யாரறிவர்
தேறியறி யாதிருப்பமோ?
மாற்றம் வேண்டிய
மானிடர் கரங்களில்
வலிமை உண்டெனும்
தெளிவதில் தேர்வமோ எனியேனும்?
தேறில்
புது வரலாறும்
நாமே படைப்போம்
எனும் முயல்வில்
கரங்கள் இணைப்பமே!

எழுத்து.கொம்

10 JUN 2020



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எப்படியெனிலும்....

உலக ஒழுங்கின் உச்சந் தன்னில்
விலக ஒண்ணா விலைவாசி ஏற்றத்தால்
நிலவும் இன முரணின் கூர்மை தன்னால்
அடங்க முடியாது எழுந்து மனிதர்
குலங்கள் இனங்கள் குறுகிய தேசியம்
கடந்து இணைந்து ஒருங்கு கூடிடத்
தடங்கல் இன்றி மாற்றம் வந்திடும்
புதிய பண்பாட்டு மாற்றம் வந்திடும்

ஒருவர் மற்றவர் உரிமை மதித்திட
ஒன்றிய உலகில் சமத்துவம் பெற்றிட
இல்லாமை எவர்க்கும் இல்லையென ஆக்கிட
பொல்லாங்கு யார்க்கும் எவரும் புரிந்திடா
நல்ல மனங்கொண்டோர் இணைவில் இனி
வதியும் மனிதர் யாவரும் ஒன்றெனவே
சாதியம் அகற்றி வேதியல் மாற்றிட
மாறிய புதிய வாழ்வும் வந்திடும்

தப்பது செய்தே தலைவர் ஆனவர் தலையும் பொடிபட
குப்புற வீழா உயர்வது பெறவே உழைப்பவர் உலகு
எப்போதும் எனி உழைப்பவர்க்கே என ஆக்கிட
ஒப்புர ஒழுகி ஒன்றுபட்டு நின்றிடவே
புதிய வரலாறு படைத்திடும் முயல்வில்
புதிய ஜனநாயக மாற்றம் வந்திடும்
எப்படியெனிலும் எழிலுறு உலகில் நின்றே
மனிதம் மலர யுகமது மாறும்.

புது வசந்தம் -2012

209CC
276836
பொதுசன நூலகம்
10 JUN 2020
மாநகர சபை
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அழ. பகீரதனின் கவிதைகளைப் படிக்கும் போது அவர் ஒரு விலகியாகத் தெரிகிறார். சமூகத்திலுள்ள குறைபாடுடைய நம்பிக்கைகளின் மீது தன்னுடைய நம்பிக்கையின்மைகளையும் அதிருப்தியையும் கண்டனத்தையும் துணிச்சலாக வெளிப்படுத்துகிறார். சில இடங்களில் இந்தக் குறைபாடுடைய நம்பிக்கையைக் கேலிப்படுத்துகிறார். இதன்மூலம் தன்னுடைய சிந்தனைகளையும் வழிமுறைகளையும் அதிகம் நம்புகின்ற ஒருவதாக இருக்கிறார். பாழடைந்திருக்கும் சமூகத்தைப் புதுப்பிப்பதைப் பற்றிச் சிந்திக்கிறார். சமூகத்திலுள்ள குறைபாடுகளின் மீது கண்டனங்களையும் விமர்சனங்களையும் முன்வைக்கின்ற ஒருவர் புதிய வழியை அல்லது மாறுதலான வழிமுறையைப் பற்றிச் சிந்திப்பவராகவே இருக்க முடியும். ஆனால், இங்கே நாம் ஒரு முக்கியமான விசயத்தைக் கவனிக்க வேண்டும். சமூகத்தில் ஒரு தரப்பினரால் கொண்டாடப்படுகிற விசயங்களும் நம்பிக்கைகளும் இன்னொரு தரப்பினருக்குக் குறைபாடுகளாகவும் கேலியாகவும் படும். இவர்களுக்கு முக்கியமானதாகவும் சிறப்பானதாகவும் படுகின்ற விசயங்கள் மற்றவர்களுக்கு அநாவசியமானவையாகத் தெரியும். இது ஒரு முரண்தான். ஆனால், இதுதான் இயல்பும் வழமையும்......

- கருணாகரன்

9 789558 637333

J. S. Printers, Pandatheruppu. 0777593810

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org